# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2304/05 - 2022 ඔක්තෝබර් මස 31 වැනි සඳුදා - 2022.10.31

*2304/05 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

*1985ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, ஒற்றோபர் 31.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் "**2022 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்**" என அழைக்கப்படும்.


1A - PG 6030 — 356 (2022/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்ட, 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆம் திகதிய 2044/40 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள், இதன் மூலம் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

3. மேலே குறிப்பிடப்பட்ட விஷேட இறக்குமதி அனுமதிப் பத்திர ஒழுங்கு விதிகளில் **I ஆவது அட்டவணையில்** பட்டியல்படுத்தப்பட்டுள்ள மற்றும் **எச்.எஸ்.தலைப்பு 88.03** இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கீழ்க் காணப்படும் பொருட்கள், **எந்தவொரு அனுமதிக்கப்பட்ட சர்வதேச விமானச் சேவை செயற்பாட்டாளர்களினால் அனுமதிக்கப்பட்ட சுங்கம் பிணைக்கப்பட்டுள்ள பிரதேச எல்லைக்குள் ஆகாய விமானங்களைப் பழுதுபார்த்தல் /பராமரித்தலுத்தக்காக** இலங்கை சிவில் விமானப் படைச் சேவை அதிகாரி தலைவரின் அல்லது பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசின் பேரில் இறக்குமதி செய்தல் இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம் (ஐ.ஸீ.எல்.) தேவைப்பாட்டில் இருந்து விடுவிக்கப்படுகின்றது.

| *I ஆவது நிரல்*<br><br>**ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு** | *II ஆவது நிரல்*<br><br>**ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டு இலக்கம்** | | *III ஆவது நிரல்*<br><br>**விபரம்** |
|---|---|---|---|
| 88.03 | | | **தலைப்பு 88.01அல்லது 88.02 இற்கான பொருட்களின் பாகங்கள்.** |
| | 8803.10.00 | - | உந்திகளும் சுழல்களும் அவற்றின் பாகங்களும் |
| | 8803.20.00 | - | விமான உடற்பகுதிகளும் அதன் பாகங்களும். |
| | 8803.30.00 | - | ஆகாய விமானங்கள் அல்லது ஹெலிகொப்டர்களின் ஏனைய பாகங்கள். |
| | 8803.90.00 | - | பிற |

4. ஒழுங்கு விதி இலக்கம் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை சிவில் விமானப் படைச் சேவை அதிகாரியின் சிபாரிசு முன் வைக்கப்படுவது

(அ) சுங்கத் தீர்வைக்காக இலங்கை சுங்கத்திற்கு, மற்றும்

(ஆ) பொருட்களின் இறக்குமதிக்கான ஆவணங்களை விடுவிப்பதற்காக மற்றும் /பற்றுக் கடிதம் (எல்.ஸீ) நிறுவுவதற்காக மற்றும் கொடுப்பனவினை மேற்கொள்வதற்க இறக்குமதியாளரின் அனுமதிப் பத்திரதார வங்கிக்கு ஆகும்

5. இவ் ஒழுங்கு விதிகளின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக இவ் ஒழுங்கு விதிகளை வினைதிறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதனை முன்னிட்டு இலங்கை சுங்கத்திற்கு மற்றும் அனுமதிப் பத்திரதார வங்கிகளுக்குத் தேவையான செயற்பாட்டு ஆலோசணைகளை வழங்குவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்திற்கு இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகின்றது.

EOG 11-0076

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.